தினமலர் மார்ச் 16 -2009

டறிக்கை வாசித்தார். சிறந்த ருதுகள் வழங்கப்பட்டன. கிறிஸ்துமஸ், விநாயகர் நாடகமாக, மாணவர்கள்

ளாளர் பழனிச்சாமி, செய துணைசெயலாளர் உமா, சிரியர் ராதாமணி, ஆசிரி கள் பங்கேற்றனர்.

## ா கல்லூரியில் பல் கண்காட்சி

றுந்திட்ட வடிவமைப்பு ளா பொறியியல் கல்லூரி ம் தொலைதொடர்பியல்

ழாவில், கல்லூரி முதல்வர் த்தார். 'பிரிக்கால்' நிறுவன டர்வளர்ச்சி துறை பொது கண்காட்சியை துவக்கி

நன்றி கூறினார்.



கல்வி உள்ளிட்ட பல துறைகளில் சாதனை புரிந்தோருக்கு, கோயம்புத்தூர் கிழக்கு ரோட்டரி கிளப் சார்பில், 'எக்ஸலென்ஸ்' விருது வழங்கப்பட்டது. விருது பெற்றவர்களுடன் ரோட்டரி கிளப் நிர்வாகிகள்.

# சிறந்த சேவை புரிந்த 5 பேருக்கு விருது

**கோவை, மார்ச் 16–**

உடற்கல்வி ஆசிரியர்கள் உள்ளிட்ட ஐந்து பேருக்கு 'ரோட்டரி எக்ஸலென்ஸ்' விருது வழங்கப்பட்டது.

பல்வேறு துறையில் சிறந்து விளங்கிய ஐந்து பேருக்கு 'ரோட்டரி எக்ஸலென்ஸ்' விருது வழங்கும் விழா, கோயம்புத்தூர் கிழக்கு ரோட்டரி கிளப் சார்பில், பி.எஸ்.ஜி. மேனேஜ்மென்ட் இன்ஸ்டிடியூட் வளாகத்தில் நடந்தது.

விருது பெற்றவர்களில், நாராயணமூர்த்தி, கே.கே. நாயுடு மேல்நிலை பள்ளி தலைமை ஆசிரியராக 20 ஆண்டுகளாக பணிபுரிந்து, அடுத்த ஆண்டு பணி ஓய்வு பெறுகிறார்.

லட்சுமணசாமி, ராஜ லட்சுமி மில்ஸ் மேல்நிலை பள்ளியில் 35 ஆண்டுகளாக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

வெள்ளிங் கிரி, அரசு மற்றும் மாநகராட்சி பள்ளி களில் உடற்கல்வி ஆசிரி யராக 40 ஆண்டு பணி யாற்றி ஓய்வு பெற்றவர்; கோவை மாவட்ட உடற் கல்வி ஆசிரியர்கள் சங்கச் செயலாளர்.

லட்சுமி, ஒண்டிப்புதுார் அரசு மேல் நிலை பள்ளி யில் 35 ஆண்டுகளாக உடற் கல்வி ஆசிரியையாக பணி யாற்றி ஓய்வு பெற்ற வர்; சர்வதேச மாஸ் டர்ஸ் தடகள வீராங் கனை.

சமீபத்தில் தாய்லாந்தில் நடந்த ஆசிய மாஸ்டர்ஸ் தடகள போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றவர்.

யோக நாதன், அரசு போக்குவரத்து கழகத்தில் பஸ் கண்டக்டராக பணி புரிந்து கொண்டு, 'ப்ளோரா பானா' தலைப்பில் மரம் நடுதல் பற்றிய நன்மையை பள்ளி, கல்லூரி தோறும் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார்.

விழாவில் இவர்களுக்கு விருது வழங்கி, கோவை ஆர்ய வைத்ய பார்மஸி மேலாண்மை இயக்குனர் கிருஷ்ணகுமார் பேசுகை யில், " ஐந்தாயிரம் ஆண்டு களாக ஆயுர் வேதிக் சிறந்த விளங்கினாலும், மிகவும் பின் அறிமுகமான அலோ பதி ஆதிக்கம் செலுத்து கிறது.

எனினும் ஆயுர்வேதிக் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் விளக்கப்படு கிறது.

பல வெளிநாடுகளிலும் ஆயுர்வேத தத்துவங்களை பரப்பும் முயற்சி உள்ளது. செய்யும் பணியில் தேர்ச்சி பெற்றால், கவுரவிக்கப் படும் போது மேலும் சிறந்து விளங்க வாய்ப்பு நிச்சயம் " என்றார்.

விழாவில், கோவை கிழக்கு ரோட்டரி கிளப் தலைவர் வெங்கடாசலம் வரவேற் றார்.

கிளப் இயக்குனர்கள் ராமானுஜம், ராஜகுமார், கிளப் உதவி கவர்னர் லட் சுமணசாமி முன்னிலை வகித்தனர்.

கோவை கிழக்கு ரோட் டரி கிளப் செயலாளர் வசந்த்ராஜ் நன்றி கூறி